*கவனிக்க .- 04.04.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1858 - 2014 අප්‍රේල් මස 11 වැනි සිකුරාදා - 2014.04.11

*1858 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 514 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 518 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : சென்டகொ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 84406
திகதி : 22.02.2012
முகவரி : இல. 49/31, 2 ஆம் குறுக்குத் தெரு, துபுக்கஹ பொதுன வீதி, உடஹமுல்லை, நுகேகொடை

கம்பனி செயலாளர்.

4-303

---

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : கெறோசெல் மோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 4092
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 02
கம்பனியின் புதிய பெயர் : பீஈ பிளஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பெயர் மாற்றப்பட்ட திகதி : 24.02.2014

கம்பனி செயலாளர்.

4-328

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, புத்தளம், மதுரங்குளி, கடையாமோட்டையில் வதியும் அப்துல் கபூர் மொஹமட் றாசிக் (தேசிய அடையாள அட்டை இல. 463262632V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. டி. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 331 ஆம் இலக்க 2014, மாச்சு 5 ஆந் திகதியிடப்பட்டு கொழும்பு 6, ஹம்டன் ஒழுங்கை, 30/6 ஆம் இலக்கத்தில் வதியும் முனவ்வர் அஹமத் நூர் முஹம்மது (தேசிய அடையாள அட்டை இல. 650822447V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் இத்தால் மீளப்பெறப்பட்டு இரத்துச் செய்யப்படுகிறது. விசேடமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளரால் அளந்து வரையப்பட்ட புத்தளம், மங்காவெளியில் அமைந்துள்ள அம்பலவெளித் தோட்டம் என அழைக்கப்படும் காணியின் விசாலம் ஒன்பது ஏக்கர் மூன்று றூட் பதினொரு பேர்ச்சஸ் (9ஏ. 3றூ. 11பே.). இக்காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கனகரத்தினம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 8798 ஆம் இலக்க 2001.02.10 ஆந் திகதியிடப்பட்ட படத்தின் காணித்துண்டு 2 என விபரிக்கப்படும் காணியின் விசாலம் இரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்தேழு தசம் மூன்று பேர்ச்சஸ் (2ஏ. 1றூ. 27.3பே.) விசாலமான காணியை எனது சார்பாக முனவ்வர் அஹமத் நூர் முஹம்மது நடந்துகொள்ளவும், விசேடமாக இக்காணியை விற்பனை செய்யும் விடயங்களில் அவர் எனது சார்பில் மேற்கொள்ளும் நடவடிக்கையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

குறித்த அற்றோணித் தத்துவதாரரால் என் சார்பில் எனக்காக எதிர்காலத்தில் புரியப்படும் எந்தவொரு செயற்பாடுகள் அல்லது பரிமாற்றங்களுக்கு நான் பொறுப்பாளியில்லை என்பதை பொது மக்களுக்கு இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்துல் கபூர் மொஹமட் றாசிக்.

4-261

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இதற்கு முன்னர் ஜா-எல, கனுவன, ராஜா மாவத்தை, இலக்கம் 27/2 மற்றும் தற்பொழுது பாணந்துறை, கெசல்வத்தை, திக்கல வீதி, 154 ஆம் இலக்கமிடப்பட்ட இடத்தில் வசிக்கும் ஹல்பவத்தகே சானக பிரதீப் பீரிஸ் (தே. அ. அ. இல. 6926690834V) ஆகிய என்னால் துடல்ல பகிரங்க நொத்தாரிசு நிமல் த பிரிட்டோ அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவ தினக்குறிப்பு அதிகார இல. 14 இல் 45 ஆம் பக்கத்தில் 7300 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள 1434 ஆம் இலக்க மற்றும் 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய அற்றோணி தத்துவத்தின் மீது எனது அற்றோணி தத்துவதாரியான ஜா-எல, கனுவன, ராஜா மாவத்தை, 27/2 ஆம் இலக்கத்தில் வசிக்கும் தொடன்கொட உடுவத்தகே மேனகா பர்னாந்து என்பவர் நியமிக்கப்பட்டிருந்ததை இத்தால் இரத்துச்செய்து அதிகாரமிழக்கச் செய்வதால், 1434 ஆம் இலக்கமிடப்பட்ட அற்றோணி தத்துவத்தின்மேல் அவரால் எனக்காக செய்யப்படுகின்ற எவ்விதமான நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை வாசிகளுக்கும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஹல்பவத்தகே சானக பிரதீப் பீரிஸ்.

2014, மாச்சு 20.

4-262

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.

தினேந்திரா பவர் (பிறைவேட்) லிமிட்டெட், 2014, மாசி மாதம் 26 ஆந் திகதிய பதிவு இலக்கம் பீவீ 96686 இன்கீழ் உள்வாங்கப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 125, இலுக்மோதற, குருநெனிய

வை. பி. எம். சீ. ஜே. செனவிரத்ன,
கம்பனி செயலாளர்.

4-288

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.

ரீ. டி. பி. சக்தி (பிறைவேட்) லிமிட்டெட், 2014, தை மாதம் 24 ஆந் திகதிய பதிவு இலக்கம் பீவீ 96685 இன்கீழ் உள்வாங்கப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 125, இலுக்மோதற, குருதெனிய

வை. பி. எம். சீ. ஜே. செனவிரத்ன,
கம்பனி செயலாளர்.

4-287

---

**அறிவித்தல்**

இங்கு தரப்பட்டுள்ள பொது அறிவித்தலின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக பிறேன்ட் புறொடக்ஷன் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தனியார் கம்பனியாக 2014, மாச்சு 14 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளது. கம்பனி பதிவு இலக்கம் பீவீ 97593, பதிவு செய்யப்பட்ட முகவரி இல. 9/5, தம்பையா அவெனியூ, சுதந்திர அவெனியூ ஊடாக கொழும்பு 7, இலங்கை.

கம்பனி செயலாளர்.

4-271

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டாஸ் இலெக்ட்ரிகல் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 97083
*கூட்டிணைப்புத் திகதி* : 17.02.2014
*பதிவு முகவரி* : இல. 553/2, அத்துருகிரிய வீதி, கொட்டாவ

கம்பனி செயலாளர்.

4-290

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிங்ஸ் பொலி பெக்கேஜிங் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 93568
*பதிவு முகவரி* : இல. 182/14, பனாலுவ கைத்தொழில் வலயம், வட்டரெக, பாதுக்கை

பணிப்பாளரின் கட்டளைப்படி,

எச் ரீ பீ பிசினெஸ் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடி.

மூன்றாம் மாடி,
மேற்கு விங்,
மெதடிஸ்ட் மத்தி கட்டிடம்,
இல. 2/5, ஸ்டேஷன் வீதி,
கொழும்பு 03.

4-233

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஒடோவின் மோட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96546
*முகவரி* : இல. 353, மாத்தளை வீதி, தம்புள்ளை

பணிப்பாளரின் கட்டளைப்படி,

எச் ரீ பீ பிசினெஸ் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடி.

மூன்றாம் மாடி,
மேற்கு விங்,
மெதடிஸ்ட் மத்தி கட்டிடம்,
இல. 2/5, ஸ்டேஷன் வீதி,
கொழும்பு 03.

4-234

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா பீ டி எல் கிறியேடிவ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 97583
*திகதி* : 14.03.2014
*பதிவு முகவரி* : இல. 94/12, கிருலப்பனை அவெனியூ, கொழும்பு 5

மேற்குறிப்பிட்ட கம்பனியின் சார்பாக,

திரு. எஸ். ஏ. பீரிஸ்,
கம்பனி செயலாளர்.

தொலைபேசி இல. : 011-2512514.

4-336

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஒனொகா ஒடோ இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 97626
கூட்டிணைப்புத் திகதி : 17.03.2014
பதிவு முகவரி : இல. 63, வைத்தியசாலை வீதி, அளுத்கமை

கம்பனி செயலாளர்.

4-333

---

## அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீவீ 9121

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2014, மாசி மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1)(பி) ஆம் பிரிவின்கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2014, மாசி மாதம் 28 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

ரீ. எச். பென்ஸன்,
எல். ஐ. பென்ஸன்,
பணிப்பாளர்.

2014, பங்குனி 26.

4-337/1

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின்கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீவீ 9121

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், இல. 66/15, ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 4 இல் அமைந்துள்ள இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் 2014, மாசி மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளர்களாக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
இனிசியேற்றிவ் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரீஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
26.03.2014.

4-337/2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

திஸ்ஸமகாராம மஹசென்புர கோயில் காணி இல. 38 இல் வசிக்கும் வல்பிட கமகே பிரியன்த குணரத்ன ஆகிய நான், 2008.03.03 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. ரணசிங்க ஆகியவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 7 ஐக் கொண்ட அற்றோணி தத்துவப் பத்திரம் மூலம் எனது அற்றோணி தத்துவப்பத்திரத்தை திஸ்ஸமகாராம கிரிந்த வீதி 'ஜயலத் வீடு' என்னும் முகவரியில் வசிக்கும் ஜயலத் லியன ஆரச்சிகே பிரேமதாச என்பவரால் நியமிக்கப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் 2014.02.06 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கிறோம்.

வல்பிடகமகே பிரியன்த குணரத்ன.

4-339

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது சம்பந்தமாக அறிவிக்கப்படுகின்றது. :-

கம்பனியின் பெயர் : சஸ்டேயினபிலிடி எஜென்டா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97486
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 30/62ட, லொக்டன் பிளேஸ், கொழும்பு 07
ஆரம்பிக்கப்பட்ட திகதி : 2014, மாச்சு 11

சபையின் ஆணைப்படி,

மனோஜி வீரசூரிய,
கம்பனி செயலாளர்கள்.

4-373

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் 2014.03.06 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

(1) கம்பனியின் முன்னைய பெயர் : தேசக்தீ லங்கா ஏஜென்சீஸ் (பீவீரீ) எல்ரீடி
(2) கம்பனியின் இலக்கம் : பீவீ 82610
(3) அலுவலக பதிவு முகவரி : இல. 22, கொழும்பு வீதி, குருநாகல்
(4) கம்பனியின் புதிய பெயர் : தேசக்தீ லங்கா ஏஜென்சீஸ் (பீவீரீ) எல்ரீடி

த்ரீ எம் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

4-371

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. :-

நிறுவனத்தின் பெயர் : எமெர்ஜிங் ஸ்டார் (பிறைவேட்) லிமிட்டட்
இணைக்கப்பட்ட திகதி : 2014.03.06
இணைக்கப்பட்ட இலக்கம் : பீவீ 95079
பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் : இல. 219/2ஏ, கொழும்பு றோட், திவுல்பிட்டிய, பொரலெஸ்கமுவ

கம்பனி செயலாளர்.

4-370

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மூன் ஸ்டார் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 96586
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 20.01.2014
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 773, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல, பெலவத்தை

மங்கள தேஷப்பிரிய கமகே,
தலைவர்/முகாமைத்துவ இயக்குநர்.

4-369

---

## பொது அறிவித்தல்

கிரியேட்டிவ் லைட்டிங் ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

(1) கம்பனியின் பெயர் : கிரியேட்டிவ் லைட்டிங் ஏசியா (பிறைவேட்) லிமிட்டட்
(2) கூட்டிணைக்கப்பட்ட திகதி : 17.09.2013
(3) பதிவிலக்கம் : பீவீ 94525
(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 5-8/2, மிலாகிரிய இடம், கொழும்பு 04

திருமதி ச. வாசவன்,
கம்பனி செயலாளர்.

4-378/2

---

## அறிவித்தல்

யுவா புரடக்ஷன் (பீவீரீ) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

(1) கம்பனியின் பெயர் : யுவா புரடக்ஷன் (பீவீரீ) எல்ரீடி
(2) கூட்டிணைக்கப்பட்ட திகதி : 06.03.2014
(3) பதிவிலக்கம் : பீவீ 97416
(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 69/18, ரெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை

திருமதி ச. வாசவன்,
கம்பனி செயலாளர்.

4-378/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| நிறுவனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுசெய்யப்பட்ட முகவரி |
|---|---|---|
| ஸ்கை ஹோல்டிங்ஸ் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97036 | செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05 |
| ஹின்ஸ்டன்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97055 | இல. 57/2, கஸ்ஸப்பா வீதி, கொழும்பு 05 |

| நிறுவனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுசெய்யப்பட்ட முகவரி |
|---|---|---|
| ஸ்கை ஹோல்டிங்ஸ் குளோபல் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97311 | இல. 28/2, பெல்லன்தர வீதி, நெதிமால, தெஹிவளை |
| ட்றெக்கடி பெ (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 97686 | செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05 |

செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

4-377

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : என் எஸ் ட்றேடிங் கொ. (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்* : பீவீ 97299

*கூட்டிணைப்புத் திகதி* : 28.02.2014

*பதிவு முகவரி* : இல. 9/A, கோமஸ் பாத், கொழும்பு 05

கம்பனி செயலாளர்.

4-376

# ஏல விற்பனைகள்

### செலான் வங்கி பீஎல்சீ – அம்பலாங்கொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணி ஏல விற்பனை**

*"கடன்பட்டோர்" என்ற வகையில் அம்பலாங்கொடையைச் சேர்ந்த கோட்டே ஹேவா விமலதிலக்க என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

**தென் மாகாணம், காலி மாவட்டத்தில், வெல்லபொடபத்து, அம்பலாங்கொடை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீட்டியா கொடவில் அமைந்துள்ள வீடு, மரங்கள், மணல் மற்றும் தொழிற் சாலை உட்பட அனைத்துடனும் "மீட்டியாவத்த குருந்துவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் டி. எம். சிறிபால என்பவரால் 1992.07.05 ஆந் திகதியிடப் பட்டு தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 227 இல் சகலதும் பிரிக்கப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டு அறியப்பட் டுள்ள காணித்துண்டு ஏ ஒரு றூட் இருபது தசம் மூன்று ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 20.39பே.) அல்லது 0.153 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே கூறப்பட்ட சொத்தை 2014, மே மாதம் 6 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

***காணியைச் சென்றடைகின்ற விதம்.***- *அம்பலாங்கொடை மத்திய நகரத்திலிருந்து புறப்பட்டு காலி வீதி மார்க்கமாக சுமார் 2 கி. மீ. தூரத்திலுள்ள மாதம்பகம சந்தி வரை சென்று இடதுபுறமாக உள்ள மீட்டியாகொட வீதியால் திரும்பி சுமார் 5 கி. மீ. தொலைவிலுள்ள மீட்டியாகொட புஸ்பராம டெம்பில் சந்திவரை சென்று வலது பக்கத்திலுள்ள புஸ்பராம மாவத்தையால் திரும்பி சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2013.08.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2013.08.21 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

*(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதத்திற்கப் பதிலாக அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி, (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.*

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, 'செலான் டவர்', இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456474, 2456485.

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 011-3068185, 2572940.

4-342

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***1476 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே, பல்லேபத்து, கடுவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தலாஹேன வில் அமைந்துள்ள "கொடபொறகஹவத்த" என அழைக்கப்படும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். அமரசேன அவர்களால் வரையப்பட்ட 1990 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 1593 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப் பட்ட காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக 1593 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய ஹோமாகம காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3று. 5பே.)***

*(முதலாவது அடகு வைத்தவர், அவரின் வருகையாளர்கள், பொறியிய லாளர்கள், ஒப்பந்தகாரர்கள், கட்டிடக் கலைஞர்கள், தொழிலாளர்கள், ஊழியர்கள், குடியிருப்பாளர்கள், அனுமதிபெற்றவர்கள், அழைக்கப் பட்டவர்கள் ஆகியோர் மின் கம்பிகளை இடவும், உயரத்தில் மின் கம்பிகளை அமைக்கவும், கழிவு நீர் கால்வாய், எரிவாயு, நீர் விநியோகக் குழாய் மற்றும் உபகரணங்கள் அல்லது வேறு எந்தவிதமான கருவிகளை அமைக்கவும், சகல விடயங்கள் சம்பந்தமாகவும், அவர்களது விருப்பத்தின் பேரிலும், இஷ்டத்தின் அடிப்படையிலும், இரவிலும் பகலிலும் போகவும், திரும்பி வரவும் நடந்தும், வேறு வகையிலும் குதிரைகள், கால்நடைகள், வேறு விலங்குகள், பொருட்களை ஏற்றிய அல்லது ஏற்றாத மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் சகலவிதமான ஏனைய வாகனங்கள் வீதியில், வீதி வழியாக அல்லது வீதிக்கு மேலாக வழி மற்றும் பாதை ஊடாக சகல வேளைகளிலும் நிரந்தரமான பிரவேசம், வெளியேற்றம், மீளப் பிரவேசம் என்பனவற்றிற்கான பூரண சுந்திரமும் அனுமதியும் இதன் பின்னர் முக்கியமாக விபரிக்கப்பட்ட தனியான அல்லது சகலவிதமான போக்குவரத்து உரிமைகளும், அனுகூலங்களும், வழிமுறைகளும் அல்லது அதனுடன் இணைத்து வைத்திருக்கப்பட்ட, உபயோகிக்கப்பட்ட, அனுபவிக்கப்பட்ட உரிமைகளும்)*

***கீழே விபரிக்கப்படும் பாதைக்கென ஒதுக்கப்பட்ட காணியை உபயோகிக்கும் உரிமையுடன்***

***மேலே கூறப்பட்ட தலாஹேனவில் அமைந்துள்ள "கொடபொற கஹவத்த" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணதிலக அவர்களால் வரையப் பட்ட 1984 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 1050 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5 எனக் குறிப்பிடப் பட்டுள்ள (12 அடி அகலமான பாதைக்கென ஒதுக்கப்பட்ட) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 1050 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய, ஹோமாகம காணிப்பதிவகத்தில் இல. ஜீ614/166 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0று. 12.50பே.)***

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். வலதர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 1476 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த இல. என்(பீவீஎஸ்) 41850 எனப் பதிவுசெய்யப்பட்ட இல. 152/2, எச்சத் மாவத்தை, மஹர, கடவத்தை என்ற முகவரியில் அமைந்துள்ள (இதன் பின்னர் 'கம்பனி' என அழைக்கப்படும்) வரையறுக்கப்பட்ட எச்சத் ஒட்டோ அக்சஸரிஸ் (தனியார்) நிறுவனத்தினால், டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இற்கு (முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி) அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

*டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.*** *- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 76,000 ;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.*

*கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.*

***மேலதிக விபரங்களுக்கு.*** *- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

*'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,*
*122 வருடகால சேவை அனுபவம்.*

தலைமை அலுவலகம் : 24, டொரிங்டன் வீதி, கண்டி. தொலைபேசி : 081-2227593 தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர அலுவலகமும் காட்சியறையும் : 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. தொலைபேசி : 011-2502680 011-2585408 தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 மின்-அஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

4-366

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1042 5324 0160 - ஜீ. டீ. நந்தசிரி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2010.03.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.07.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.06.17 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட எட்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நாற்பத்தொரு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 8,56,041.13) 2010, சனவரி 8 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை ஏழு இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து ஐம்பத்தொன்பது ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 7,73,059.37) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.04.30 ஆந் திகதி பி. ப. 1.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலேயின் உடுகாஹா பத்துவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் (வேத்தர உப அலுவலகத்தின்) சித்தமுல்ல கிராமத்தில் அமைந்த 'எட்டம்பகாஹாகனத்த' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். எம். எல். பிரேமசந்திர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, திசெம்பர் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 5500 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் சீ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 375 எனும் வரைபடத்தில் லொட் 5 ; கிழக்கு : லொட் பி ; தெற்கு : மெத மாவத்தை ; மற்றும் மேற்கு : லொட் டி. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் எட்டு ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.81பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 5500 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் என் 371/37 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4-395

---

**நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியன கோரளையின் மெத பத்துவில் திஹாரியவில் அமைந்துள்ள தெல்கஹவத்த, இட்டம்ப கஹவத்த, நுககஹலந்த மற்றும் இட்டம்பகஹலந்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. றூபசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2011.07.17 ஆந் திகதியிடப்பட்ட 128/2011 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 9ஏ எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்துப் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப் பட்ட காணிப்பகுதி. கொண்டுள்ள பரப்பளவு ஒரு றூட் பத்து பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 10பே.).

கூறப்பட்ட காணித்துண்டு 9ஏ இன்கீழ் காட்டப்பட்ட காணியின் பகுதியாகவும் பிரிவாகவும் உள்ளது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியன கோரளையின் மெத பத்துவில் திஹாரியவில் அமைந்துள்ள தெல்கஹவத்த, இட்டம்ப கஹவத்த, நுககஹலந்த மற்றும் இட்டம்பகஹலந்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எப். சமீரால் தயாரிக்கப்பட்ட 1980.10.05 ஆந் திகதியிடப்பட்ட 2386 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 9 எனக் குறித்துக்காட்டப்பட்ட காணியின் அனைத்துப் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகுதியாக உள்ளதும் பரப்பளவில் ஒரு ஏக்கரை (1ஏ. 0றூ. 0பே.) உடையதும் 2386 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காட்டப்பட்டதும் கம்பஹா காணிப்பதிவு அலுவலகத்தில் நு1020/ 246 இல் பதிவுசெய்யப்பட்டதும் ஆகும்.

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். ஜே. ஏ. டபிள்யூ. கே. ஹேரத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 2011, ஒற்றோபர் 25 ஆந் திகதியிடப்பட்ட 2165 ஆம் இலக்கமுடைய ஈட்டுமுறிக்கு ஏற்ப முகமட் லபீர் மொஹமட் சியாட் கடப்பாடு உடையவர்/ஈடுவைப்பாளர் என்ற வகையில் இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியிடம் "லப்சன் ட்ரேட் சென்ரர்" என்ற பெயரிலும்

வகையிலும் உரிமையாளராக வர்த்தகத்தை நடத்திவரும் கூறப்பட்ட முகமட் லபீர் மொஹமட் சியாட் பெற்றுக்கொண்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்கான பிணையாக இத்துடனுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் நிலையங்களை வங்கியின் பொறுப்பில் ஈடுவைத்துள்ளதுடன் கூறப்பட்ட முறிக்கேற்ப பெற்ற நிதி வசதிகளுக்குரிய மீள்கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கேற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2014, மே 5 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- நிட்டம்புவ நகரத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு வீதி வழியாக கொழும்பு நோக்கி சுமார் 3.5 கிலோ மீற்றர்கள் திஹிரிய வரை பயணம் செய்து வலது பக்கமாக "லப்சம்ஸ் றிசெப்ஷன்ட் ஹோல்" அருகில் 15 அடி அகலமான கிரவல் வீதி ஒதுக்கீட்டில் திரும்பி தொடர்ந்து சுமார் 75 மீற்றர்கள் தூரம் சென்று அதன் வலது பக்கமுள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை**.- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;
(6) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி இல. 011-4218746.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

4-385

## நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் வெரிகம கோரளைக்குள் உடுகவவில் அமைந்துள்ள பலுரதகெவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எஸ். ஜயவர்தனவால் தயாரிக்கப்பட்ட 2004.07.29 ஆந் திகதியிடப்பட்ட 9639 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு ஏ எனக் குறித்துக்காட்டப்பட்ட வரையறுக்கப்பட்ட காணிப்பகுதியில் உள்ள நிலம், மண் மற்றும் பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது. (மாத்தறை மாவட்ட காணிப்பதிவு அலுவலகத்தில் டி1162/ 26 ஆம் தொடர்பிலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) கொண்டுள்ள பரப்பளவு (0ஏ. 1றூ. 10.92பே.) ஒரு றூட் மற்றும் பத்து தசம் ஒன்பது இரண்டு பேர்ச்சுகள் (0.1288 ஹெக்டெயர்கள்). மேற்கூறப்பட்ட 9639 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காட்டப்பட்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. எஸ். யாப்பாவால் தயாரிக்கப்பட்ட 1991.12.13 ஆந் திகதியிடப்பட்ட 114ஏ ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் ஏ, பி, சீ, ஈ மற்றும் டி எனக் காட்டப்பட்டதுமான வீதி மீதான பாதைக்கான உரிமையுடனும் சேர்த்து மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் 6975 ஆம் இலக்க வழக்குப் பதிவேட்டில் கோப்பிலிடப்பட்டதும் ஆகும்.

மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சரத் பிரிய செனரத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 2011, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 6591 ஆம் இலக்கமுடைய ஈட்டுமுறிக்கு ஏற்ப துமிந்த கங்கானமகே கடப்பாடு உடையவர்/ஈடுவைப்பாளர் என்ற வகையில் இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இல் கூறப்பட்ட துமிந்த கங்கணம்கே பெற்றுக்கொண்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்கான ஒரு பிணையாக இத்துடனுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் நிலையங்களை வங்கியின் பொறுப்பில் ஈடுவைத்துள்ளதுடன் கூறப்பட்ட கடன் பெற்றவர் கூறப்பட்ட முறிக்கேற்ப பெற்ற நிதி வசதிகளுக்குரிய மீள்கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கேற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2014, மே 2 ஆந் திகதி ந. ப. 12.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- வெலிகம நகரத்திலிருந்து புறப்பட்டு அஹங்கம செல்லும் பிரதான வீதி வழியாக சுமார் 6.2 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து வலது பக்கமாக ஒரு கொங்கிறீட் இடப்பட்ட பிரதேச சபை வீதிக்குத் திரும்பி அதில் சுமார் 250 மீற்றர்கள் தூரம் சென்று பின்னர் வலது பக்கமாக 3 மீற்றர்கள் அகலமான கிரவல் வீதிக்கான ஒதுக்கீட்டுக்குத் திரும்பி மேலும் அதில் சுமார் 150 மீற்றர்கள் தூரம் சென்று அதன் வலது பக்கம் அமைந்திருக்கும் இந்த ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை.**- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;

(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;

(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;

(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் (100%) ;

(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் ரூபா 2,000.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன் ட்ரஸ்ட் பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி இல. 011-4218746.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

4-386

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.